**DEPOSITION OF WITNESS (Code of Civil Procedure)**

**IN THE COURT OF DISTRICT AND SESSIONS COURT,**

**COMMUNAL CLASH CASES, MADURAI**

**MCOP No.** 1713/2022

மனுதாரர் தரப்பு சாட்சி - 1

Name : ரேவதி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed by Thiru.Palanivel, Gr.I.Bench clerk of this court in accordance with the provision of Oaths Act of the day of 19.06.2023

**முதல் விசாரணை**

நான் மனுவில் 1 வது சாட்சி ஆவேன். இந்த வழக்கு சம்மந்தமாக விவரங்களை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை நேரில் அறிந்து கையெழுத்திட்டுள்ளேன். அதற்கு ஆதரவாக ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | எனது கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கை |
| ம.சா.ஆ.3 | இறப்பு சான்றிதழ் |
| ம.சா.ஆ.4 | வாரிசு சான்றிதழ் |
| ம.சா.ஆ.5 | எனது கணவரின் அடையாள அட்டை |
| ம.சா.ஆ.6 | எனது கணவரின் ஓட்டுநர் உரிமம் |
| ம.சா.ஆ.7 | 1-5 ஆதார் அடையாள அட்டை நகல்கள் ( 5 எண்ணம்) |
| ம.சா.ஆ.8 | 1-5 வங்கி கணக்கு புத்தகத்தில் நகல்கள் ( 5 எண்ணம்) |

மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு மனுவில் கோரியுள்ள படி இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டுகிறேன்.

**<u>1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்து போனவர் எனது கணவர். சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. தகவல் தெரிந்த பின்னர் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய காருக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே, 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மட்டும் தான் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவர் வேலை மற்றும் வருமானம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் மிகைப்படுத்திய இழப்பீடு கோரியுள்ளேன் என்றால், சரியல்ல. விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்பதால் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால், சரியல்ல. எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் கணவர் பணிபுரிந்த மதுரை விவசாயக்கல்லூாி என்பது அரசு நிறுவனம் என்றால் சரிதான். என் கணவர் தற்காலிகமாக பணி புரிந்தார் என்றால் சரிதான். என் கணவர் பணிக்கு செல்லும் நாட்களுக்கு மட்டும அவருக்கு சம்பளம் வழங்கப்படும் என்றால் சரிதான். அரசு விடுமுறை நாட்களில் அவருக்கு சம்பளம் கிடையாது என்றால் சரிதான். விவசாய கல்லூாி அலுவலகத்தினரை விசாரித்தால் தான் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு சம்பளம் பெற்றால் என்ற விபரங்கள் 3 துலங்கும் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் மிகைப்படுத்திய இழப்பீடு கோரியுள்ளேன் என்றால், சரியல்ல. விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்பதால் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க

கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால், சரியல்ல. எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை பகுதியாக ஒத்திவைக்கப்படுகிறது.**